## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXIII Code of Criminal Procedure)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
## *CC.No.422/2022 – P.W.6 (LW9)*

| | |
|---|---|
| *Name* | திரு. பிரேம் ஆனந்த், உதவி ஆய்வாளர் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | |

**எதிரிகள் 1, 3 ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.06.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்சமயம் பரவாக்கோட்டை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சிவஞானம் அவர்களின் கையொப்பம் உடன் பணிப்புரிந்த வகையில் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் கால தாமத்தினை தவிர்க்கும்பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 21.09.2022ம் தேதியன்று பரவாக்கோட்டை காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சிவஞானம் அவர்கள் பணியிலிருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த விக்னேஷ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதனடிப்படையில் நிலைய குற்ற எண்.198/2022ல் இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2)ன் கீழ் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். (அவர் **பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 22.09.2022ம் தேதியன்று சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் கருணாநிதி முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன். **(வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

4. இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. மோகன்ராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் பதிவு செய்த விபத்து

பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்தேன். மருத்துவரின் விசாரணையில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவுகள் இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2)லிருந்து இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 326, 506(2) ஆக மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். (**சட்டப்பிரிவு மாற்றறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடியபோது 1, 2, 3 எதிரிகளை கைது செய்து நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தினேன். 4வது எதிரி நீதிமன்ற முன்பிணை பெற்ற விவரம் தெரியவந்தது. இத்துடன் எனது விசாரணை முடித்து 1, 3, 4 எதிரிகளின் செய்கை இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2)ன் கீழும் 2வது எதிரியின் செய்கை இதச பிரிவுகள் 341, 294(பி), 326, 506(2)ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ஊமைத்துரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் - இல்லை. சம்பவ இடமானது ஊரைத்துரையின் தரிசு வயலுக்கு பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் - சரிதான். பார்வை மகசரில் மோகன் சிமிண்ட் ஒர்க்ஸ் அருகில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் - சரிதான். இந்த முரண்பாடுகள் குறித்து ஏதேனும் விளக்கம் கொடுத்துள்ளேனா என்றால் - இல்லை.

2. சாட்சி பட்டியலில் உள்ளவர்கள் அனைவரும் அ.சா.1ன் உறவினர்கள் என்றால் - சரிதான். மற்றவர்கள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் - சரிதான்.

3. காயம்பட்டவர் உள்ளிக்கோட்டை மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றபின்னர்தான் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளார் என்றால் - சரிதான். உள்ளிக்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை.

4. இந்த வழக்கிற்கு முன்பே அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் வழக்கும் எதிரிடை வழக்கும் உள்ளது என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் - தெரிந்துக்கொண்டேன். இந்த வழக்கிற்கு முன்புள்ள எதிரிடை வழக்கில் எதிரி தங்கதுரை காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விவரத்தினை தெரிந்துக்கொண்டேனா என்றால் - விசாரணையில் தெரிந்துக்கொண்டேன்.

5. இந்த வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் - சரிதான். புகார் வாக்குமூலத்தில் கம்பியால் தாக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் - சரிதான். மருத்துவமனையில் மருத்துவரிடம் அருவாளால் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் - சரிதான். புகார் வாக்குமூலத்தில் இடது கைவிரலில் காயமிருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான்.

6. காயம்பட்ட நபரின் உறவினரான சந்தாகிருஷ்ணனுக்கும் எதிரிகளுக்கும் தான் இடப்பிரச்சினை என்றால் - சரிதான். காயம்பட்ட நபர் வெளிநாடு செல்வதற்காக முன்பிருந்த வழக்கு தடையாக இருப்பதால் அந்த வழக்கினை சமரசம் பேசுவதற்கு எதிரிகள் ஒத்துழைக்காததால் வாகனத்திலிருந்து விழுந்த காயத்தினை பயன்படுத்தி பொய்யான புகார் வாக்குமூலம் மறுநாள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. அதன்பேரில், சரியாக விசாரணை மேற்கொள்ளாமல் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யாமல் காவல்நிலையத்திலேயே வைத்து ஆவணங்கள் தயார் செய்து கால தாமதமாக குற்ற அறிக்கை

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் - சரியல்ல.